**<u>சுருக்கம்</u>**

மாற்றுத் திறனாளிகள் நலன் – 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் மாவட்ட அளவில் முதல் 3 இடங்களைப் பெறும் காதுகேளாத மற்றும் வாய்பேச இயலாத மாற்றுத் திறனாளி மாணவ, மாணவியர்களுக்கு ரொக்கப் பரிசு, பாடப் புத்தகம் மற்றும் விடுதிக் கட்டணம் வழங்குதல் – 2013–2014 ஆம் ஆண்டிற்கான திட்டத் தொடராணை மற்றும் ரூ.25,17,500/– நிதி ஒப்பளிப்பு – 2014–2015 ஆம் நிதியாண்டில் வழங்குதல் – ஆணை– வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (நிலை) எண்.45,** **நாள்: 13.08.2014**

**ஜய–ஆடி 28, திருவள்ளுவர் ஆண்டு, 2045**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண்.68, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 14.06.2012.
2. அரசாணை (நிலை) எண்.23, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 01.03.2013.
3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித எண்.3763/சிபதி/2013, நாள் 25.06.2013.
4. அரசாணை (நிலை) எண்.62, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 01.07.2013.

----

**<u>ஆணை:</u>**

மேலே ஒன்று மற்றும் இரண்டில் படிக்கப்பட்ட அரசாணைகளில், 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் மாநில மற்றும் மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற செவித்திறன் குறைபாடுடைய மற்றும் வாய்பேச இயலாத மாற்றுத் திறனாளி மாணவ / மாணவியர்களுக்கு ரொக்கப் பரிசு, பாடப் புத்தகம் மற்றும் விடுதிக் கட்டணம் வழங்கும் திட்டத்தினை 2012–2013ம் ஆண்டிற்கு தொடர, திட்ட தொடராணையும், ரூ.36,64,000/– நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணைகள் வெளியிடபட்டன.

2. மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், மாவட்ட அளவில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெறும் காதுகேளாத மற்றும் வாய்பேச இயலாத மாணவ / மாணவியருக்கு ரொக்கப் பரிசு, பாடப் புத்தகம் மற்றும் விடுதிக் கட்டணம் வழங்கும் திட்டத்தினை, 2013–2014 ஆண்டில் தொடர, திட்டத் தொடராணையும், இச்செலவினத்திற்கென ரூ.25,17,500/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்குமாறு அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மேலே நான்கில் படிக்கப்பட்ட அரசாணையில், 2013–2014 ஆம் நிதியாண்டிற்காக, 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்புகளில் மாநில அளவில் முதல் 3 இடங்களைப் பெற்ற, காதுகேளாத மற்றும் வாய்பேச இயலாத மாணவ / மாணவியருக்கு ரொக்கப் பரிசு வழங்கிட ரூ.1,60,000/– நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

**[த.பி.பா]**

4. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, 2013–2014 ஆம் நிதியாண்டில், 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில், மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற காதுகேளாத மற்றும் வாய்பேச இயலாத மாணவ / மாணவியருக்கு ரொக்கப் பரிசு, பாடப் புத்தகம் மற்றும் விடுதிக் கட்டணம் வழங்கும் திட்டத்தினை தொடர, திட்டத் தொடராணையும், இச்செலவினத்திற்கென ரூ.25,17,500/–ஐ, (ரூபாய் இருபத்தைந்து இலட்சத்து பதினேழாயிரத்து ஐநூறு மட்டும்) இவ்வாணையின் இணைப்பு–1 மற்றும் 2ல் கண்டுள்ளவாறு நிதி ஒப்பளிப்பு செய்தும், இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி அளித்தும் அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம், பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

**“2235–சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02–சமூகநலன் – 101–மாற்றுத் திறனாளிகள் நலன் – I–திட்டத்தில் சேராதது – AR-காது கேளாதோர் பள்ளிகள் – 59–பரிசுகளும், வெகுமதிகளும்” (கு.தொ.கு.2235–02–101–AR-5900).**

6. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.41085/நிதி(சந)/2014, நாள் 11.08.2014–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்.**
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
மாநிலக் கணக்காயர், சென்னை–18 / பெயரில்.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள்.
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)

**நகல்**
முதன்மைச் செயலரின் தனிச் செயலர், மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சென்னை–9.
இருப்பிட தணிக்கை அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை–9.
நிதி(சந)துறை, சென்னை–9.
இ. கோ / உ. ந.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.

## இணைப்பு–1

**10 ஆம் வகுப்பில் மாவட்ட அளவில் முதல் மூன்று நிலைகளைப் பெற்ற காதுகேளாத மற்றும் வாய்பேச இயலாத மாணவ/மாணவிகள் ரொக்கப் பரிசு, பாடப்புத்தகம் மற்றும் விடுதிக் கட்டணம் வழங்க விவரப் பட்டியல்**

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | பயனாளிகள் எண்ணிக்கை | 1ம் இடம் ரூ. | 2ம் இடம் ரூ. | 3ம் இடம் ரூ. | மொத்தம் ரூ. | பாடப்புத்தகம் மற்றும் விடுதிக் கட்டணம் சேர்த்து நபர் ஒருவருக்கு ரூ.11,000/– ரூ. | மொத்தத் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | கன்னியாகுமரி | 3 | 6000 | 4500 | 3000 | 13500 | 33000 | 46500 |
| 2. | திருநெல்வேலி | 3 | 6000 | 4500 | 3000 | 13500 | 33000 | 46500 |
| 3. | இராமநாதபுரம் | 3 | 6000 | 4500 | 3000 | 13500 | 33000 | 46500 |
| 4. | சிவகங்கை | 3 | 6000 | 4500 | 3000 | 13500 | 33000 | 46500 |
| 5. | விருதுநகர் | 3 | 6000 | 4500 | 3000 | 13500 | 33000 | 46500 |
| 6. | தேனி | 2 | 6000 | 4500 | – | 10500 | 22000 | 32500 |
| 7. | மதுரை | 3 | 6000 | 4500 | 3000 | 13500 | 33000 | 46500 |
| 8. | திண்டுக்கல் | 3 | 6000 | 4500 | 3000 | 13500 | 33000 | 46500 |
| 9. | நீலகிரி | 3 | 6000 | 4500 | 3000 | 13500 | 33000 | 46500 |
| 10. | திருப்பூர் | 3 | 6000 | 4500 | 3000 | 13500 | 33000 | 46500 |
| 11. | கோயம்பத்தூர் | 3 | 6000 | 4500 | 3000 | 13500 | 33000 | 46500 |
| 12. | ஈரோடு | 3 | 6000 | 4500 | 3000 | 13500 | 33000 | 46500 |
| 13. | சேலம் | 3 | 6000 | 4500 | 3000 | 13500 | 33000 | 46500 |
| 14. | நாமக்கல் | 3 | 6000 | 4500 | 3000 | 13500 | 33000 | 46500 |
| 15. | தர்மபுரி | 4 | 6000 | 4500 | 6000 | 16500 | 44000 | 60500 |
| 16. | புதுக்கோட்டை | 3 | 6000 | 4500 | 3000 | 13500 | 33000 | 46500 |
| 17. | கரூர் | 3 | 6000 | 4500 | 3000 | 13500 | 33000 | 46500 |
| 18. | அரியலூர் | 3 | 6000 | 4500 | 3000 | 13500 | 33000 | 46500 |
| 19. | பெரம்பலூர் | 5 | 6000 | 13500 | 3000 | 22500 | 55000 | 77500 |
| 20. | திருச்சி | 3 | 6000 | 4500 | 3000 | 13500 | 33000 | 46500 |
| 21. | நாகப்பட்டினம் | 3 | 6000 | 4500 | 3000 | 13500 | 33000 | 46500 |
| 22. | திருவாரூர் | 2 | 6000 | 4500 | – | 10500 | 22000 | 32500 |
| 23. | தஞ்சாவூர் | 3 | 6000 | 4500 | 3000 | 13500 | 33000 | 46500 |
| 24. | விழுப்புரம் | 3 | 6000 | 4500 | 3000 | 13500 | 33000 | 46500 |
| 25. | கடலூர் | 3 | 6000 | 4500 | 3000 | 13500 | 33000 | 46500 |
| 26. | திருவண்ணாமலை | 4 | 6000 | 4500 | 6000 | 16500 | 44000 | 60500 |
| 27. | வேலூர் | 3 | 6000 | 4500 | 3000 | 13500 | 33000 | 46500 |
| 28. | காஞ்சிபுரம் | 3 | 6000 | 4500 | 3000 | 13500 | 33000 | 46500 |
| 29. | திருவள்ளூர் | 4 | 6000 | 4500 | 6000 | 16500 | 44000 | 60500 |
| 30. | சென்னை | 3 | 6000 | 4500 | 3000 | 13500 | 33000 | 46500 |
| | **மொத்தம்** | **93** | **180000** | **144000** | **93000** | **417000** | **1023000** | **1440000** |

பொ.சிவசங்கரன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்.

## இணைப்பு–2

**12 ஆம் வகுப்பில் மாவட்ட அளவில் முதல் மூன்று நிலைகளைப் பெற்ற காதுகேளாத மற்றும் வாய்பேச இயலாத மாணவ/மாணவிகள் ரொக்கப் பரிசு, பாடப்புத்தகம் மற்றும் விடுதிக் கட்டணம் வழங்க விவரப் பட்டியல்**

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | பயனாளிகள் எண்ணிக்கை | 1ம் இடம் ரூ. | 2ம் இடம் ரூ. | 3ம் இடம் ரூ. | மொத்தம் ரூ. | பாடப்புத்தகம் மற்றும் விடுதிக் கட்டணம் சேர்த்து நபர் ஒருவருக்கு ரூ.11,000/– ரூ. | மொத்தத் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | கன்னியாகுமரி | 3 | 12000 | 7500 | 4500 | 24000 | 39000 | 63000 |
| 2. | திருநெல்வேலி | 3 | 12000 | 7500 | 4500 | 24000 | 39000 | 63000 |
| 3. | இராமநாதபுரம் | 3 | 12000 | 7500 | 4500 | 24000 | 39000 | 63000 |
| 4. | சிவகங்கை | – | – | – | – | – | – | – |
| 5. | விருதுநகர் | – | – | – | – | – | – | – |
| 6. | தேனி | – | – | – | – | – | – | – |
| 7. | மதுரை | 3 | 12000 | 7500 | 4500 | 24000 | 39000 | 63000 |
| 8. | திண்டுக்கல் | – | – | – | – | – | – | – |
| 9. | நீலகிரி | – | – | – | – | – | – | – |
| 10. | திருப்பூர் | 3 | 12000 | 7500 | 4500 | 24000 | 39000 | 63000 |
| 11. | கோயம்பத்தூர் | 3 | 12000 | 7500 | 4500 | 24000 | 39000 | 63000 |
| 12. | ஈரோடு | 1 | 12000 | – | – | 12000 | 13000 | 25000 |
| 13. | சேலம் | 3 | 12000 | 7500 | 4500 | 24000 | 39000 | 63000 |
| 14. | நாமக்கல் | 2 | 12000 | 7500 | – | 19500 | 26000 | 45500 |
| 15. | தர்மபுரி | 3 | 12000 | 7500 | 4500 | 24000 | 39000 | 63000 |
| 16. | புதுக்கோட்டை | 1 | 12000 | – | – | 12000 | 13000 | 25000 |
| 17. | கரூர் | 1 | 12000 | – | – | 12000 | 13000 | 25000 |
| 18. | அரியலூர் | – | – | – | – | – | – | – |
| 19. | பெரம்பலூர் | – | – | – | – | – | – | – |
| 20. | திருச்சி | – | – | – | – | – | – | – |
| 21. | நாகப்பட்டினம் | 3 | 12000 | 7500 | 4500 | 24000 | 39000 | 63000 |
| 22. | திருவாரூர் | 1 | 12000 | – | – | 12000 | 13000 | 25000 |
| 23. | தஞ்சாவூர் | 1 | 12000 | – | – | 12000 | 13000 | 25000 |
| 24. | விழுப்புரம் | – | – | – | – | – | – | – |
| 25. | கடலூர் | 3 | 12000 | 7500 | 4500 | 24000 | 39000 | 63000 |
| 26. | திருவண்ணாமலை | 3 | 12000 | 7500 | 4500 | 24000 | 39000 | 63000 |
| 27. | வேலூர் | 3 | 12000 | 7500 | 4500 | 24000 | 39000 | 63000 |
| 28. | காஞ்சிபுரம் | 3 | 12000 | 7500 | 4500 | 24000 | 39000 | 63000 |
| 29. | திருவள்ளூர் | 1 | 12000 | – | – | 12000 | 13000 | 25000 |
| 30. | சென்னை | 3 | 12000 | 7500 | 4500 | 24000 | 39000 | 63000 |
| | **மொத்தம்** | **50** | **252000** | **112500** | **63000** | **427500** | **650000** | **1077500** |

**சுருக்கம்**

| | |
|---|---|
| **10ம் வகுப்பு மாணவ/மாணவிகளுக்கான தொகை (இணைப்பு–1)** | **ரூ.14,40,000/–** |
| **12ம் வகுப்பு மாணவ/மாணவிகளுக்கான தொகை (இணைப்பு–2)** | **ரூ.10,77,500/–** |
| **கூடுதல் தொகை** | **ரூ.25,17,500/–** |

பொ.சிவசங்கரன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்.